



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



தயை என்றால் என்ன? மற்றவர் துன்பப்படும்போது அதை நீக்க வேண்டும் என்று எண்ணம் தோன்றினால் அதுவே தயை. வேறு விதமாக இருந்தால் அவனை ‘தயையில்லாதவன்’ என்று சொல்வர். மனிதனுடைய சிறந்த பண்பு தயை, அப்படிப்பட்ட தயையாகிய கருணையை நம்மிடத்தே அதிகப் படுத்த வேண்டும். சிலருக்கு இயற்கையாகவே விசேஷமாகக் கருணை இருக்கும். சில பேருக்கு நல்ல மனிதர்களுடைய ஸஹவாசத்தினால் அவர்களைப் போல் தாமும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானால் தயை உண்டாகும். அதனால் நாம் தயையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## सुभाषितानि


## நல்லுரைகள்

अभिमानविहीनानां किं धनेन किं आयुषा ? அபி⁴மானவிஹீனானாம்’ கிம்’ த⁴னேன கிம்’ ஆயுஷா ? = தற்பெருமையில்லாதவருக்குச் செல்வமும், ஆயுளும் ஒரு பொருட்டாகுமா?

अप्यप्रसिद्धं यशसे हि पुंसां अनन्यसाधारणमेव कर्म। அப்யப்ரஸித்³த⁴ம்’ யஶஸே ஹி பும்’ஸாம்’ அனன்யஸாதா⁴ரணமேவ கர்ம| = பலரறியாதிருப்பினும் மற்றவரால் இயலாத பணியைச் செய்து முடிப்பதே மனிதருக்குப் புகழ் தருவதாகும்.


अभद्रं भद्रं वा विधिलिखितमुन्मूलयति कः ? அப⁴த்³ரம்’ ப⁴த்³ரம்’ வா விதி⁴லிகி²தமுன்மூலயதி க: ? = கெட்டதோ, நல்லதோ விதி எழுதியதை எவனால் மாற்ற இயலும்?

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

प्राप्यापदं नव्यथते कदाचित् उद्योगमन्विच्छति चाप्रमत्तः ।
दुःखं च काले सहते महात्मा
धुरन्धरस्तम्यजितास्सपत्नाः
॥५४



ப்ராப்யாபத³ம்’ நவ்யத²தே
கதா³சித் உத்³யோக³மன்
விச் ச²தி சாப்ரமத்த: |
து³:க²ம்’ ச காலே ஸஹதே
மஹாத்மா து⁴ரந்த⁴ர
ஸ்தம்யஜிதாஸ்ஸபத்னா:
||54

ஓ பரத சிரேஷ்டரே! மஹாத்மாவான் ஆபத்தை அடைந்தும் ஒரு பொழுதும் மனதை துன்புறுத்திக் கொள்ளான், தவறிவிடாமல் முயற்சி செய்வான், துக்கம் நேரிட்ட காலத்தில் அதை ஸஹிப்பான். இப்படிப் பட்டவன் தான் அவன் சத்ருக்களையெல்லாம ஜெயித்துவிடுவான்.

अनर्थकं विप्रवासं गृहेभ्यः पापैस्सन्धिं परदाराभिमर्शम् ।
दम्भं स्तैन्यं पैशुनं मद्यानं नसेवते यश्चसुखी सदैव ॥५५

அனர்த²கம்’ விப்ரவாஸம்’ க்³ரு’ஹேப்⁴ய: பாபைஸ் ஸந்தி⁴ம்’ பரதா³ராபி⁴மர்ஶம் |
த³ம்ப⁴ம்’ ஸ்தைன்யம்’ பைஶுனம்’ மத்³யானம்’ நஸேவதே யஶ்சஸுகீ² ஸதை³வ ||55

காரியமில்லாமல் வீட்டை விட்டு வெளிதேசம் செல்வதையும், பாபிகளின் சேர்க்கையையும், பிறர் மனைவியை தொடுவதையும், டம்பத்தையும், திருட்டையும், கோள் சொல்வதையும், கள் குடித்தலையும் எவன் விட்டு விடுகிறானோ அவன் எப்பொழுதும் சுகியாக இருப்பான்.

(தொடரும்….)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## பாபங்கள் பத்து வகை

யாவஜ்ஜீவம் ஸுகம் ஜீவேத் ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத்|
பஸ்மீபூதஸ்ய தேஹஸ்ய புனராகமனம் குத: ||



"சாகும் வரையில் கடன் வாங்கியாவது சாப்பிடுவோம். பிறகு நாங்கள் இறந்த பின்னர், யார் யாரைக் கேட்க முடியும்?" என்பது சார்வாகர்களின் ஸித்தாந்தம். இத்தகைய எண்ணங்களை வைத்துக் கொள்வது, "விததாsபினிவேசம்" என்ற பாபம் ஆகும். ஆகவே இந்த மூன்று விதமான மானஸிக பாபங்களையும் நாம் செய்யவே கூடாது.

அடுத்ததாக வாக்கால் ஏற்படும் பாபங்களைப் பார்ப்போம்.

பாருஷ்யமன்ருதம் சைவ பைசூன்யஞ்சாபி ஸர்வச: |
அஸம்பத்தப்ரலாபச்ச வாங்மயம் ஸ்யாச்சதுர்விதம் ||

நாம் மற்றவர்களுடன் பேசும்போது, அவர்களுடைய மனதிற்கு எந்தவித துன்பமும் உண்டாகாத ரீதியில் பேச வேண்டும். பகவான் ஓரிடத்தில்,

அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் |
ஸ்வாத்யாயாப்யஸனம் சைவ வாங்மயம் தப உச்யதே ||

என்றார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

ஒரே விஷயத்தை நாம் பல விதங்களில் சொல்வதற்கு முடியும். ஒருவரைக் கூப்பிடும் போது, "இங்கே, வாருங்கள்! உங்களிடம் நான் ஒரு விஷயம் பேச விரும்புகிறேன்" என்று சொல்வதற்கும், "ஏய்! இங்கே வா! நான் சொல்வதைக் கேள்!" என்று சொல்வதற்கும் நிறைய வித்யாஸம் இருக்கிறது. இரண்டிலும் அர்த்தம் ஒன்றாயினும், நம் பேச்சினால் உண்டாகக்கூடிய விளைவுகள் வித்யாஸமாக உள்ளன. முதலில் கூறியதுபோல் மரியாதையாகக் கூப்பிட்டால், ஒருவர் மிகுந்த மகிழ்ச்சியோடு வருவார். ஆனால், அதேசமயம் அதிகாரத்தோடு கூப்பிட்டால், "இவன் ரொம்ப பெரிய மனிதன் போல் என்னை அதிகாரம் செய்கின்றானே!" என்று நினைத்து அவனிடம் போக மாட்டார்.

வசனே கா தரித்ரதா

கௌரவமான வார்த்தைகள் சொல்வதில் என்ன செலவு செய்ய வேண்டும்? ஆனால், சிலருக்கு அந்த பாவனை இருக்காது. வார்த்தைக்கு வார்த்தை அடுத்தவர் மனதிற்கு துன்பம் ஏற்படும்படி பேசும் குணம் மிகுந்த பாபத்தைத் தரும்.

அடுத்த பாபம்: அன்ருதம் சைவ

இது எல்லோருக்கும் தெரியும். பொய் சொல்வது பெரிய பாபம். இது தெரியாதவர்கள் யாரும் இல்லை. ஆனால், நடைமுறைக்கு வரும்போது அதை அனைவரும் மறந்து விடுகிறார்கள். பொய் சொல்வது தவறு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும், பொய் சொல்லாமல் யாராலும் இருக்க முடிவதில்லை. இது மிகவும் ஆச்சர்யகரமான விஷயம்.

பகவான் ஸ்ரீ இராமசந்திரன் தனது வாழ்வில் என்றுமே பொய் சொன்னதில்லை. அவர் ஒருவனுடைய சொத்துக்கும் ஆசைப் பட்டதில்லை. அதேசமயம், பொய் சொல்லாமல் தன்னால் வாழ முடியாது என்றும் சிலர் நினைக்கிறார்கள். அது பெரிய தவறு. அப்படிப்பட்டவர்களுக்குத் தாங்கள் பவித்ரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் தீவிரம் இல்லை. பவித்ரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற தீவிரம் இருந்தால் ஒருவன் பொய் சொல்லவே மாட்டான்.

ஹரிச்சந்திரனுடைய கதையைப் படித்திருக்கிறோம். அவன் சத்தியத்தைத் தவிர வேறெதுவும் சொன்னதில்லை. சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, நாம் நினைத்துப் பார்க்க முடியாத கஷ்டங்களை அவர் அனுபவித்தார். அவர் விஸ்வாமித்திரரிடம், 'நான் இந்த இராஜ்ஜியத்தை வேண்டுமானாலும் விட்டுவிடுவேன். ஆனால், பொய் சொல்ல மாட்டேன்" என்றார்.

(தொடரும் .....)

## ஸ்ரீ ஸூக்தம்

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

29. நினைத்ததை நிறைவேற்றவல்ல ஸித்த லட்சுமி யாகவும், முக்தியைத் தரவல்ல மோட்ச லட்சுமியாகவும், வெற்றியைத் தரவல்ல ஜய லட்சுமியாகவும், தாமரைக் குளத்தில் தோன்றியவளாகவும், செல்வத்தைத் தரவல்ல திருமகளாகவும், வரங்களைத் தரவல்ல வரலட்சுமியாகவும் இருக்கின்ற நீ எனக்கு எப்போதும் அருள் நிறைந்தவளாக இருப்பாய்.




30. வரம் மற்றும் அபய முத்திரைகளைக் கைகளில் தாங்கியவளும், பாசம் அங்குசம் ஆகிய ஆயுதங்களைக் கைகளில் தாங்கியவளும், தாமரையில் வீற்றிருப்பவளும், கோடிஉதயசூரியப்பிரகாசம் பொருந்தியவளும், மூன்று கண்களை உடையவளும், ஆதிசக்தியும், உலகின் இறைவியுமான அவளை நான் துதிக்கிறேன்.

31. மங்கலம் அனைத்திற்கும் மங்கலமானவளே, மங்கலத்தைத் தருபவளே, எல்லா நன்மைகளையும் தருபவளே, சரணடைவதற்கு உரியவளே, மூன்று கண்களை உடையவளே, தேவீ, நாராயணி உனக்கு நமஸ்காரம்.

32. தாமரையை இருப்பிடமாகக் கொண்டவளே, தாமரையைக் கையில் தாங்கியவளே, தூய வெள்ளாடையும் நறுமண மாலையும் அணிந்து அழகாய் விளங்குபவளே, பகவதீ, திருமாலின் துணைவியே, விருப்பங்களை அறிந்து நிறைவேற்று பவளே, மூவுலகையும் வளமளித்துக் காப்பவளே எனக்கு அருள் புரிவாய்.

(தொடரும்..)

For free e magazine Our Mail ID : Info@voiceofjagadguru.com

**என்றும் புதியவர்**

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கற்றறிந்த பண்டிதர்

இதைத் தவிர ஒரு பண்டிதருக்கும் இன்னொருவருக்கும் ஏற்படும் இயல்பான உராய்வையும் ஆசார்யர் மிகுந்த நயத்துடன் கையாள வேண்டியிருக்கும். எனவே, இம்மாதிரியான அவைகளுக்குத் தலைமை வகிக்கும் ஆசார்யர் சாஸ்திரங்களில் புலமை, விவாதங்களில் உடனடியாகப் பதில் கூறும் ஆற்றல், கற்றோர் நயம் பாராட்டுதல், இப்படி பல்வேறு விதங்களில் தமது திறமையைக் காட்ட வேண்டும். இதற்கான "பயிற்சியும்" பீடத்தில் உள்ள ஆசார்யர் தமது சிஷ்யருக்குப் பல்வேறு வழிகளில் தருவதும் வழக்கமாக இருக்கிறது.



இது தொடர்பாக, ஆசார்யாள் பிரம்மசாரியாக இருந்த போது ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவருடைய அறிவித்திறனை எப்படி பல வகைகளில் சோதித்தார் என்பதையும் ஆசார்யாளின் அறிவாற்றல் அந்த சமயங்களில் எப்படி வெளிப்பட்டது என்பதையும் பாஷ்ய ஸ்வாமிகள் விவரமாக எழுதியுள்ளார். அதிலிருந்து ஒரு சில பகுதிகளை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். முதலாவதாக பாஷ்ய ஸ்வாமிகள் ஆசார்யாளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியைப் பற்றி,

"... இன்று ஆயிரக்கணக்கான மஹா ரஸிகர்களும் வித்வான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹா ஸபைகளில் தம் உபதேச அம்ருதவர்ஷத்தால் எல்லோரையும் மெய்சிலிர்க்கும்படி செய்யக்கூடிய ஓர் அபூர்வ மஹிமை அவர் (ஆசார்யாள்) பிரம்மசர்யம் முதல் பழகி வந்த தபோ பலத்தால் தான்; கற்றுணர்ந்த கல்வியினால் தான். அதுவும் நம் குருநாதாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வமிகள்) ஏற்படுத்திய கல்வி முறையினால் தான் இந்தக் கல்வி முறை தான் அன்று மான்களுடனும் மயில்களுடனும் விளையாடி ரிஷிகுமாரன் போல் விளங்கிவந்த அந்த மூர்த்தியை (ஆசார்யாளை) இன்று ராஜாக்களுடனும் மந்திரிகளுடனும் ராஷ்ட்ரபதிகளுடனும் உறவாடச் செய்கிறது ..."

## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

என்று கூறுகிறார். நாம் முன்னர் கூறியது போல், கற்றவர் குழுமிய அவையில் பொருள் சொல்லும் போது கல்வியை நன்கு கற்றிருத்தல் மட்டும் போதாது. அதைத் தவிர ஒரு கேள்விக்கோ அல்லது ஆட்சேபணைக்கோ உடனடியாக விடை கூறும் ஆற்றல், தான் அறிந்ததை கற்றோர் முன் அஞ்சாது கூறுதல், சமயோசித புத்தி முதலியவையும் அவசியமாகின்றன. இத்திறன்கள் வெளிப்பட வேண்டும் என்றால் அதற்கான பயிற்சியும் வேண்டும். இதையே பாஷ்ய ஸ்வாமிகள் "... குருநாதாள் ஏற்படுத்திய கல்விமுறை" என்கிறார். அது எத்தகையது என்பதைச் சுருக்கமாகச் சொல்வோம்.

ஆசார்யாள் பிரம்மசாரியாக இருந்த காலத்தில், ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மாலை வேளைகளில் ஸ்ரீனிவாஸர், மற்றும் அவருடன் கல்வி பயிலும் மாணவர்கள், அவர்களுக்குக் கல்வி பயில்வித்த வைத்யநாத சாஸ்திரிகள் (பாஷ்ய ஸ்வாமிகளின் பூர்வாசிரமப் பெயர்) ஆகியோருடன் காலபைரவர் ஆலயம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சில சமயங்களில் மடத்தில் உள்ள மற்ற பண்டிதர்கள் சிலரும் உடன்செல்வது உண்டு. அந்த சமயத்தில் அவர் மாணவர்களை சுலோகங்கள் கூற வைத்து அவற்றின் பொருளையும் விளக்கச் சொல்வார். அல்லது அவர் தாமே சில சுலோகங்களைக் கூறிப் பொருள் வினவுவார். இப்படிப் பலர் முன்னிலையில் பொருள் விரித்துக் கூறும் பயிற்சியை அவர் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே அளித்ததை விவரிக்கும் பல நிகழ்வுகள் பலவற்றை பாஷ்ய ஸ்வாமிகள் பதிவு செய்துள்ளார். அதில் ஒன்றை மட்டும் இங்கே கூறுவோம்:

"... ஸ்ரீ ஸந்நிதானம் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) ஒரு சுலோகத்தை மட்டும் குறிப்பிட்டு 'நாளைக்கு இதற்குப் பொருள் கூற வேண்டும்' என்று உத்தரவிட்டார். (அந்த சுலோகம் பின்வருமாறு)

अवचनचिन्मुद्राभ्यां अद्वैतं बोधरूपमात्मानम् ।
ब्रूते तत्र च मानं पुस्तकभुजगाग्निभिर्महादेवः ॥
அவசனசின்முத்$^{3}$ராப்$^{4}$யாம்' அத்$^{3}$வைதம்' போ$^{3}$த$^{4}$ரூபமாத்மானம் .
ப்$^{3}$ரூதே தத்ர ச மானம்' புஸ்தகபு$^{4}$ஜகா$^{3}$க்$^{3}$னிபி$^{4}$ர்மஹாதே$^{3}$வ꞉ ..

(மஹேச்வரன் (தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில்) மௌனம், சின்முத்திரை இவைகளால் ஆத்மா அத்விதீயமென்றும், ஞானவடிவமென்றும், எங்கும் நிறைந்தது என்றும் உபதேசிக்கிறார். (தன்னிடமுள்ள) புஸ்தகம், ஸர்ப்பம், அக்னி இவைகளால் அதற்குப் பிரமாணத்தையும் கூறுகிறார்.)
(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்
(An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ
ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 5
### ஆஹார சுத்தி

ஒரு ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவ அபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்கள் பிராஹ்மண போஜனத்திற்காக ஸித்தமாகவிருந்த பதார்த்தங்களைப் பார்வையிட்டபோது. அவைகளிலிருந்த புடலங்காயை உபயோகப்படுத்த வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். காரணம் கேட்கும்போது, அதற்கு ஸம்ஸ்கிருதத்தில் पटोलि "படோலி" என்று பெயர் இருந்தும்கூட அவைகளை அடுக்கிவைத்திருந்த மாதிரியில் இன்னொரு பெயரான सर्पशाकम् (பாம்பு போல உள்ள காய்) என்று தோன்றினபடியால். அவைகளை ஸந்தர்ப்பணையில் உபயோகப்படுத்துவது உசிதமில்லையென்று சொல்லிவிட்டார்கள். இக்காலத்தில் சில பதார்த்தங்கள் மாம்ஸம்போலவும் ரத்தம் போலவும் தெரிகின்றன. அவைகளும் மிக நிஷித்தமே ஆகும்.

பாவதுஷ்டமென்பது அன்னம் கொடுப்பவர் அல்லது பக்கத்திலிருப்பவர் மனதுகளிலுள்ள பாவனையினால் இந்த அன்னத்திற்கு தோஷம் ஏற்படுமென்று அபிப்ராயம். அதனாலேயே ஸாதாரணமாக சாப்பிடாதவர்கள் முன்னிலையில் சாப்பிடக்கூடாதென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு "நாம் சாப்பிடாமலிருக்கும்போது இவன் சாப்பிடுகிறானே" என்று தோன்றலாம். அல்லது பின் பங்க்தியில்தான் சாப்பிட வேண்டுமென்றிருந்தால் "இவன் எத்தனை நாழிகை சாப்பிடுகிறான். நமக்கு சாப்பிடத் தாமதம் ஆகிறதே" என்றும் நினைக்கலாம். இவ்விதமாக அவர்களுடைய மனோபாவம் கொஞ்சமிருந்தாலும் அன்னத்திற்கு தோஷமுண்டு. அப்படியிருக்கையில் "இவன் இவ்வளவு சாப்பிடுகிறானே" என்று தோன்றினால் தோஷம் வெகு அதிகம். ஆகையினால்தான் சாப்பிடுகிறவன் எவ்வளவு சாப்பிட்டாலும் திருப்தியுடன் போடக்கூடிய தாயார் கையால் போடச்சொல்லி சாப்பிடுவதே உத்தமமென்று சொல்லுவார்கள். இக்காலத்தில் சாப்பாடு விடுதிகளில் சாப்பிடுகிறவன் அதிகமாகச் சாப்பிடச் சாப்பிட



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

விடுதிக்காரனுக்கு நஷ்டமே ஏற்படுகிறபடியால், இவன் குறைத்தே சாப்பிட வேண்டுமென்று அவன் நினைப்பது ஸஹஜம். அவனுடைய மனோபாவம் அப்படி இருக்கையில் அவனுடைய அன்னத்தை கிரஹிப்பது தோஷமே ஆகும். அதனால்தான் சாஸ்திரத்தில் அன்னதானத்தை மிகவும் சிலாகித்துவிட்டு, அன்ன விக்ரயத்தை நிந்தித்திருக்கிறார்கள். தர்ம சாஸ்திரத்தில், ஒருவன் விராத்யனாக இருந்தாலும் உதாரகுணமுள்ளவனாக இருந்தால் அவன் கிருஹத்தில் அன்னம் கிரஹிக்கலாமென்றும், நல்ல ஆசாரபரனாயிருந்தும் கஞ்சனாக இருந்தால் அவன் அன்னம் சிலாக்யமில்லையென்றும் சொல்லப்படுகிறது. ஆகையினால் பிரியமாக மனப்பூர்வமாகப் போடக்கூடியவர்களுடைய அன்னத்தையே கிரஹிப்பதுதான் உசிதம். ஆக இந்த நான்குவித தோஷங்களும் இல்லாமல் இருக்கும் அன்னத்தை நாம் கிரஹிக்க வேண்டும்.

அன்னத்தை கிரஹிப்பதிலும் நாம் மனுஷ்யன் என்பதையும், மிருகங்கள் மாதிரி கண்டவிடத்திலெல்லாம், எப்பொழுது வேண்டுமானாலும், ஒருவித நியமுமன்னியில், கிரஹிப்பது உசிதமில்லையென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதற்காகவே போஜன விஷயமாக பலவித விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. தீர்த்தமோ ஆஹாரமோ நின்றுகொண்டு கிரஹிக்கக்கூடாது. இதுபோல பலவித நியமங்கள் இருப்பதை இக்காலத்தில் மீறுகிறவர்களே அதிகமாகிக்கொண்டு வருகிறார்கள். நின்றுகொண்டு இடது கையில் பழத்தையோ பக்ஷணத்தையோ வைத்துக்கொண்டு வாயால் கவ்விக் கடித்துக்கொண்டு சாப்பிடுவது நாகரீகம் என்று நினைத்துகொள்ளும் காலமாக இது இருக்கிறது. மற்ற நியமங்களை இங்கு எடுத்துச் சொல்ல அவசியமில்லை.

இவ்விதமாக சுத்தமான ஆஹாரத்தை முறைப்படி கிரஹித்தால் அதன் மூலமாய் மனது சுத்தி அடைகிறது आहारशुद्धौ सत्त्वशुद्धिः என்று வேதமே என்று பிருஹதாரண்யக உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. புத்திக்குத் தெளிவே, கிரஹிக்கும் சக்தியோ, தாரணை செய்யும் சக்தியோ, மேல் மேல் தோன்றக்கூடிய சக்தியோ, ஞாபகப் பிசகில்லாமலிருக்கும் சக்தியோ, தட்டுக்கிடல் இராமல் இருக்கும் தன்மையோ, ஸூக்ஷ்மமான விஷயங்களை மனதில் வாங்கிக்கொள்ளும் தன்மையோ ஜனங்களிடம் குறைந்து வருவதற்கு முக்யமான காரணம் ஆஹார சுத்தமின்மையே. ஆகையால் நாம் இருக்கும் நிலையைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கும், மேல் நிலைக்குப் போவதற்கும் ஆஹார விஷயமாய் மிகவும் ஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்று நன்கு தெரிகிறது.

(தொடரும் …) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஶ்ரீஶாரதா3ஸ்தோத்ரம்

### (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

के का न पूजयेयुस्त्वां भुवनेऽस्मिन्महोत्सवे वाणि ।
इति नाम्मैव हि वक्तुं भाति त्वत्सन्निधौ केकी ||२७||

கே கா ந பூஜயேயுஸ்த்வாம்' பு4வனே(அ)ஸ்மின்மஹோத்ஸவே வாணி .
இதி நாம்மைவ ஹி வக்தும்' பா4தி த்வத்ஸந்நிதௌ4 கேகீ ||27||

வாணி | இவ்வுலகில் எந்த ஆண்களோ (கே) எந்த பெண்களோ (கா:) இந்த உற்சவத்தின் போது உன்னைப் பூஜிக்காமலிருப்பர் என்று சொல்வதற்காகவே இந்த கேகீ (மயில் கே கா என்ற கூவுதலைக்கொண்டதால் கேகீ) உன் எதிரில் உள்ளது. (27)

शिखिसूर्यचन्द्रमुख्यानहमेवास्थाय पालयामीदम्।
जगदिति निबोधनार्थं वागीश्वरि भासि शिखिनमास्थाय ||२८||

ஶிகி2ஸூர்யசந்த்3ரமுக்2யானஹமேவாஸ்தா2ய பாலயாமீத3ம்.
ஜக3தி3தி நிபோ3த4னார்த2ம்' வாகீ3ஶ்வரி பா4ஸி ஶிகி2னமாஸ்தா2ய ||28||

வாக்கின் ஈசுவரியே! சிகீ (அக்கினி) ஸூர்யன் சந்திரன் முதலியவர்களிடம் உட்புகுந்து அவர்களை இயக்கி இவ்வுலகைக் காப்பாற்றுகிறேன் என்பதைக் காட்டவே சிகியை (மயிலை) வாகனமாகக் கொண்டு விளங்குகிறாயோ! (சிகா = ஜ்வாலை. அதனைக் கொண்டவன் சிகீ - அக்கினி (28).

शम्भौ सन्ति शशाङ्कसूर्यशिखिनो नेत्रापदेशात्सदा सागर्थ्यं त इमे निरीक्ष्य गिरिजानाथस्य मातस्त्वयि ।
वक्त्रारक्तपटीसुवाहमिषतः सेवां सदा कुर्वते मोदादेव हि ते न चात्र विशयः कश्चिद्गिरां देवते ||२९||

ஶம்பௌ4 ஸந்தி ஶஶாங்கஸூர்யஶிகி2னோ நேத்ராபதே3ஶாத்ஸதா3 ஸாக3ர்த்2யம்' த இமே நிரீக்ஷ்ய கி3ரிஜாநாத2ஸ்ய மாதஸ்த்வயி .
வக்த்ராரக்தபடீஸுவாஹமிஷத: ஸேவாம்' ஸதா3 குர்வதே மோதா3தே3வ ஹி தே ந சாத்ர விஶய: கஶ்சித்3கி3ராம்' தே3வதே ||29||

தாயே / வாக்குகளின் தேவதையே! சிவனிடம் சந்திரனும், ஸூரியனும், சிகியும் (அக்னியும்) கண்கள் என்ற பெயரில் உள்ளனர். மலை மகளின் நாதனின் உடலில் தாம் உடன் பிறந்தவர்களாக - ஒருவறையில் குடியிருந்தவர்களாக இருந்ததை உணர்ந்து, முகம், செந்நிற ஆடை, வாகனம் என்ற பெயரில் ஸந்தோஷத்துடன் உனக்குப் பணிவிடை புரிகின்றன. (சந்திரன் முகமாக, ஸூரியன் செந்நிற ஆடையாக, பிரும்மா அன்ன வாகனமாக, உள்ளனர்). இதில் சந்தேகம் ஏது? (29) (தொடரும் …)

ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஶ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### முதலாவது ஸர்கம்



### ஶ்ரீராம ஹ்ருதயம்

சம்சாரத் தளையிலிருந்து விடுபட்டு முக்தியை அடைய விரும்புகிறவர், எப்போதும் அத்யாத்ம ராமாயணத்தைப் படிப்பாராக; எவரொருவர், நாள்தோறும் இதனைக் கேட்கிறாரோ, அவர் ஆயிரம் பதினாயிரம் கோடி பசுக்களைத் தானம் செய்த (புண்ணிய) பலனைப் பெறுவார். ஶ்ரீமகாதேவர் என்ற மலையில் தோன்றி, ஶ்ரீராமன் என்ற கடலில் கலந்த 'அத்யாதம ராமாயணம்' என்ற இந்த கங்கை, மூன்று உலகங்களையும் புனிதப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

ஒரு சமயம், கைலாயத்தின் முன்புறத்தில், ஒரு விசாலமான அரங்கத்தில் ரத்தினங்கள் இழைக்கப்பட்ட ஆசனத்தின் மீது அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தவரும். சித்தர்களின் கூட்டங்களால் வணங்கப்பட்டவரும் முக்கண்ணரும். எல்லா மாசுகளையும் போக்குபவரும் ஆனந்தத்தின் அழிவற்ற மூலவேராக இருப்பவரும் தேவர்களுக்குத் தலைவருமான மகாதேவரைப் பார்த்து, அவரது இடது பாகத்தில் இடம் கொண்டிருக்கும் இமவானின் குமாரத்தியான பார்வதி, அவரைப் பக்தியோடு பணிந்து கேட்டாள்: தேவ தேவனே! உலகங்களுக்கெல்லாம் உறைவிடமானவரே! தங்களுக்கு நமஸ்காரம். தாங்கள் எல்லோருடைய அந்தராத்மாவையும் காணக்கூடியவர்; பரமேசுவரர்; சனாதனரும் புருஷோத்தமருமான ஶ்ரீபகவானுடைய தத்துவத்தைத் தங்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், தாங்களும் சனாதனர் அல்லவா? மிகவும் மறைபொருளாக உள்ளதும், பிறருக்குச் சொல்லக் கூடாததுமான விஷயங்களைக் கூட, மேலோர்கள் தம் அடியார்களுக்குச் சொல்கிறார்கள். ஐயனே! நான் தங்களுடைய பக்தை: அன்புக்கு உரியவள். அருள் கூர்ந்து நான் கேட்பதை எனக்குக் கூறுங்கள்.



எந்த ஞானத்தை அடைந்து மனிதர்கள் சம்சாரக் கடலைக் கடந்து செல்கிறார்கள், பக்தி-வைராக்கியத்துடன் கூடிய அறிவால் உணரத்தக்க அப்படிப்பட்ட ஞானப் பேரொளியை, பெண்ணாகிய நானும் புரிந்து கொள்ளும் வகையில் சுருக்கமாகக் கூறியருள வேண்டும். தாங்கள் இந்த என் கோரிக்கையை மறுக்க கூடாது. கமலக்கண்ணா! இன்னொரு பரம ரகசியத்தையும் தங்களிடம் கேட்க



## ஸத் ஸம்ப்ரதாயம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

விரும்புகிறேன். அதற்கான பதிலையே முதலில் கூறுங்கள். 'அகில உலகங்களுக்கும் சாரமான ஸ்ரீராமசந்திர மூர்த்தியிடம் ஏற்படும் பக்தி, சம்சாரக் கடலைக் கடப்பதற்கு உதவும் உறுதியான படகு' என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

பிறப்பிலிருந்து விடுபடுவதற்குப் பக்திவழியே சிறந்தது; அதைத் தவிர வேறு எந்தச் சாதனமும் இல்லை - என்பது அனைவரும் அறிந்தது தான். என்றாலும், என்னுடைய மனத்திலுள்ள சந்தேக முடிச்சுக்களைத் தங்களுடைய செவ்விய சொற்களால் துண்டித்து விடுங்கள். ராமனே பரம்பொருள்; இரண்டற்ற வஸ்து; மூலப் பொருள்; மாயா குணங்களின் வெள்ளத்தில் மூழ்காதவர் - என்று சொல்கிறார்கள். குற்றங்குறைகள் இல்லாத ஸித்த புருஷர்களும், இரவு பகலாக அந்த ராமபிரானைப் போற்றிப் பூசித்து மிகவும் உயர்ந்த மோட்ச) பதவியை அடைகிறார்கள். மற்றும் சிலர், 'ராமன் பரமாத்மாவாக இருந்தபோதிலும், தானாகவே ஏற்றுக்கொண்ட அவித்யையில் மூழ்கிப் போய், தனது ஆத்ம ஸ்வரூபத்தை அறியாமற் போனார் . அதனால்தான், ஆத்மாவைப் பற்றி பிறர் சொல்லக் கேட்டு அறிந்தார்' என்று சொல்கிறார்கள்.

அவர் தன்னைப் பற்றி அறிந்திருந்தால், (கவர்ந்து செல்லப்படுதல் போன்ற) சீதை விஷயமாகப் பிறரால் செய்யப்பட்ட செயல்கள் குறித்து, ஏன் இவ்வளவு அழுது அரற்ற வேண்டும்? அதை அவர் அறியவில்லை என்றால், மற்ற சாமான்ய உயிர்ப் பிராணிகளைப் போன்றவர் தானே, அவரும்? அவரை ஏன் சேவிக்க வேண்டும்? இவைகளுக்கு உரிய பதில் தங்களுக்குத் தெரிந்திருந்தால், அதைக் கூறி என் சந்தேகத்தைப் போக்கி அருளுங்கள்.

ஸ்ரீமகாதேவர் சொன்னது

நீ என்னுடைய பக்தை. பரமாதமாவான ஸ்ரீராமனுடைய தத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உன் மனத்தில் தோன்றியுள்ளதே! நீ பெருமபேறு பெற்றவள்! மிகவும் ஆழமான இந்தத் தத்துவ ரகசியத்தைக் கூறும்படி இதற்கு முன் என்னை யாரும் கேட்டுக் கொண்டதில்லை! இப்போது, பக்தியோடு உன்னால் கேட்கப்பட்டுள்ளேன். அதனால், ஸ்ரீரகுநாயகனை நமஸ்கரித்து, உன் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். ஸ்ரீராமசந்திரர் தான் பரம்பொருள்; பிரகிருதிக்கு அப்பாற்பட்டவர்; ஆரம்பம் இல்லாதவர்; ஆனந்தமயமானவர்; இரண்டற்ற ஒன்றேயான வஸ்து; புருஷோத்தமர். தன்னுடைய மாயையால் இவ்வுலகனைத்தையும் படைத்து, ஆகாயத்தைப் போல், அவற்றின் உள்ளும் புறமும் விளங்குபவர். எல்லோருடைய இதயத்திலும் அந்தராத்மாவாக இருந்து கொண்டு தன் மாயையால் இந்த அண்டங்களைச் சுழல வைக்கிறார்.(தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்